REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2020 டிசம்பர் 7 திங்கட்கிழமை

வரு. 88 இல. 290 | December 07,Monday, 2020 | 24பக்கங்கள் | 30/-




## 100 கிலோ ஹெரோயின்; 100 கிலோ ஐஸ்போதை

# மாரவிலவில் பெருந்தொகை போதைப் பொருள் சிக்கியது

### நால்வர் கைது; கனரக, சொகுசு வாகனங்களும் மீட்பு

**புத்தளம் மாவட்ட குறூப் நிருபர்**

சுமார் 100 கிலோ ஹெரோயின் மற்றும் ஐஸ் ரக போதைப் பொருள் சிலாபம், மாரவில பகுதியில் கைப் பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 04 வாகனங்க








ளுடன் நான்கு சந்தேக நபர்களும் கலால் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்போதைப் பொருள் கடத்தலை

## அதிகளவான தொற்றாளர்கள்; மரணங்களும் அதிகரிப்பு;

# கொரோனா அபாய வலயமாக கொழும்பு

### சுகாதார பிரிவினர் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடந்த ஒரு வாரமாக கொழும்பில் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதனால் குறித்த பகுதி அபாயமுடையது என சுகாதார தரப்பினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



வெலிக்கட, அங்கொடை, அத்திட்டிய, பொரல்லஸ்கமுவ, தெஹிவளை, கொத்தொட்டுவ, மடபத்த, புவக்பிட்டிய, ராஜகிரிய மற்றும் தலவத்துகொட ஆகிய பகுதிகளில் இவ்வாறு தொடர்ந்தும் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதாக கொவிட் தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இதேவேளை நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 27,000 ஐ கடந்துள்ள

06






## கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில்

# சில பகுதிகள் விடுவிப்பு; ... பிரதேசங்கள் இன்று முதல் முடக்கம்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு மாவட்டத்தின் புளுமென்டல் பொலிஸ் பிரிவு மற்றும் வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவின் விஜயபுர கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகிய பிரதேசங்கள் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து இன்று காலை 05.00 மணி முதல் விடுவிக்கப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மேலும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள களனி பொலிஸ் பிரிவு இன்று காலை 05.00 மணி முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்



படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று காலை 05 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் கொழும்பு மாவட்டத்தின் கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவின் ஹுணுபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவு, கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவின் 60 தோட்டம், வெள்ளவத்தை பொலிஸ் பிரிவின் கோகிலா வீதி ஆகிய பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், கம்பஹா மாவட்டம், வத்தளை

06



தென்பகுதியிலுள்ள மாவெல்ல நங்கூரமிடும் தளத்தின் கட்டுமானப் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று (06) ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, நாமல் ராஜபக்ஷ, மஹிந்த அமரவீர, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம்களின் ஜனாஸா உரிமையை வழங்காமை வெட்கக்கேடான விடயம்

### பாராளுமன்றத்தில் TNA எம்.பி சாணக்கியன் கடும் சாடல்

**ஷம்ஸ் பாஹிம்,**
**சுப்பிரமணியம் நிசாந்தன்**

முஸ்லிங்களின் ஜனாஸா உரிமை கூட அவர்களுக்கு வழக்கப்படவில்லை. அப்பாவி முஸ்லிம்கள் அவர்களின் மத நம்பிக்கைகளுக்கு இணங்கி வாழ்கின்றனர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின்



மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தில் துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

06

# அமரர் சந்திரசேகரனின் உருவப்படத்தை ம.ம.மு பயன்படுத்த அனுஷா எதிர்ப்பு

### அவர் ஆரம்பித்த தொழிற்சங்கத்தை தவறாக பயன்படுத்துவதாக சாடல்

தமது தந்தையான அமரர் பி. சந்திரசேகரனின் உருவப் படத்தையோ அல்லது அவரின் பெயரையோ, மலையக மக்கள் முன்னணி பயன்படுத்தக்கூடாது என்று, அனுஷா சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது,...



தமது தந்தை அமரர் சந்திரசேகரன் ஆரம்பித்த தொழிற்சங்கத்தை தற்போது வியாபாரத்திற்காக தலைமைகள் பயன்படுத்துவதாக அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

06

# முன்னாள் அமைச்சர் ஏக்கநாயக்க காலமானார்

முன்னாள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தனது 66 ஆவது வயதில் நேற்று காலமானார்.

திடீர் உடல் நலக் குறைவு காரணமாக அண்மையில் வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.



ஏக்கநாயக்க குருணாகல் மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு பல சந்தர்ப்பங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன்,

06

## சமூகத்தை புறந்தள்ளி கட்சியின் கொள்கைகள் மீறல்;

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அலிசாஹிர் மௌலானா இராஜினாமா

# மௌலானாவின் குற்றச்சாட்டு நியாயமானது என்கிறது மு.கா

# கண்டியில் திடீரென உயிரிழந்த பெருமளவிலான குரங்குகள்